Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.193/2025

Dated 26-11-2025
Deposition of witness for : PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக் | வயது | : | 34 |
| தந்தை பெயர் | : | செல்வம் | தாலுக்கா | : | திருவையாறு |
| கிராமம் | : | செந்தலை | தொழில் | : | இரண்டாம் நிலை காவலர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. Defense **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது திருவையாறு காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 27.4.2024ம் தேதி மதியம் 12.30 மணிக்கு நான், அ.சா.1 தலைமை காலவர், காவல் ஆய்வாளர் சர்மிளா ஆகியோர்கள் தஞ்சாவூர் - அரியலூர் மெயின்ரோட்டில் கஸ்தூரிபாய் அருகில் சிவஞானம் வயலுக்கு அருகே ரோந்து சென்றுகொண்டிருக்கும்போது அங்கு ஆஜர் எதிரி கையில் கத்தி போன் வாளை வைத்துக்கொண்டு அங்கு போக வர மக்களை தேவடியா மகனே குச்சி காரி மகனே என்று

திட்டிக்கொண்டும் இந்த ஊரிலே நான்தான் பெரிய ரவுடி என்று அங்கு போய்கொண்டிருக்கிற மக்களை மிரட்டிக்கொண்டும் என் மீது நிறைய வழக்கு இருக்கிறது என்று மிரட்டி கொண்டிருந்தார்.

3) அப்போது எங்களை பார்த்தவுடன் மேற்படி எதிரி எங்களையும் கையில் வைத்திருந்த வாளை காட்டி என்னை பிடித்தால் உங்களையும் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்.

4) உடனே நாங்கள் மேற்படி எதிரியை வளைத்து பிடித்து அவர் கையில் வைத்திருந்த என் முன்னிலையிலும் அ.சா.1 முன்னிலையிலும் ஆய்வாளர் வாளை மகஜர் மூலம் கைப்பற்றினார். அவற்றில் நான் இரண்டாவது சாட்சி கையொப்பம் போட்டேன்.

5) பின்பு எதிரியையும் கைப்பற்றப்பட்ட வாளுடன் நிலையம் வந்து நிலைய கு.எண்.244/2024 பிரிவு 294(b) 506(ii) IPC மற்றும் 3(1) of PPDL Act ன் படி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார்.

6) இது பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) அன்றைய தினம் காவல்நிலையத்தில் இருக்கும்போது ஆய்வாளர் திருவையாறு - அரியலூர் மெயின்ரோட்டில் ரோந்து செல்லவேண்டும் என்று சொன்னார். அவற்றை கையேட்டில் எழுதி உள்ளேன். அந்த கையேட்டை அன்று ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை.

2) நாங்கள் போகும்போது பகல் 12.30 மணி இருக்கும். நடுகாவேரி என்பதும் சம்பவம் நடந்ததாக சொல்லும் பகுதியும் வெவ்வேறு பகுதி என்றால் சரிதான்.

3) நடுகாவேரிக்கு தனியாக காவல்நிலையம் உள்ளது.

4) அன்று போகும்போது தனி நபர் சாட்சிகள் யாரையும் அழைத்தாரா என்றால் யாரும் முன் வரவில்லை.

5) முதல் விசாரணையில் நான் நடவடிக்கைகள் போது நான் ஆய்வாளரிடம் கூடவே இருந்தேன்.

அந்த தனி நபர் யார் யார் முன் வரவில்லை என்ற விபரத்தை ஆய்வாளர் விசாரித்து எழுதிக்கொண்டாரா என்றால் எழுதிகொள்ளவில்லை.

6) அவ்வாறு யார் யார் வரவில்லை என்பதனால் அந்த தனிநபர்களுக்கு அறிவிப்பு எதுவும் அனுப்பபட்டதா என்றால் தெரியாது.

7)அ.சா.ஆ.1ல் கையொப்பம் சம்பவ இடத்தில் வைத்து போட்டேன்.

8) அ.சா.1ல் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

9) சம்பவ இடத்தில் இருந்து காவல்நிலையத்திற்கு செல்லும்போது பகல் 13.30 மணி ஆனது.

10) ஆய்வாளர் விசாரித்து விட்டு வழக்கு பதிவு செய்தார் .

11) அ.சா.ஆ.1ல் குற்ற எண் மற்றும் பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9) நான் முன் விசாரணையில் சொன்னதுபோல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் காவல்நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவேண்டும் என்று காவல்நிலையத்தில் எதிரியை வீட்டில் இருந்து அழைத்து வந்து ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கினங்க எதிரி மீது வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் கேட்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10) எதிரியிடம் இருந்து சான்று பொருள் எதுவும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/P.வேல் முருகன்

முதன்மை மாவட்ட நீதிபதி

தஞ்சாவூர்